REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 226

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

PHONE No. 55630

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: மாசி 22உ வெள்ளி (5—3—54) ★ ★ ★ வெளியூர்: மாசி 23உ சனி (6—3—54)

உதவி நிதி நிறுவனத்தில் ஊழல்?

நிர்வாகிகளே பெரும் தொகையைக் கடனாக விழுங்கினர்!

—(:)—

பார்லிமெண்டில் டாக்டர் லங்காசுந்தரம் தாக்குதல்

யூனியன் சர்க்கார் திணறல்

புதுடில்லி, மார்ச் 4—

'நெருங்கினவர்களுக்கு சலுகை காட்டுதல்' 'தொலைத் துக்கட்ட வேண்டியவர்களை பாதுகாத்து நிற்றல்' ஆகிய குற்றங்களை யூனியன் சர்க்கார் செய்திருக்கிறது.

"கார்ப்பொரேஷன் நிர்வாகத்தில் சம்பந்தப்பட்டுள்ள உத்தியோகஸ்தர் விஷயத்தில் மட்டுமல்லாமல், அதன் நடவடிக்கையில் தொடர்பு கொண்டுள்ள முதலாளிகளையும் சுற்றிவேலியிட்டும், ஏன், அதற்கு மேலும் சென்று கூடுமானவரை பாதுகாப்பு அளித்தும் இருக்கிறது யூனியன் சர்க்கார். கடந்த ஐந்து அல்லது ஆறு வருஷத்திய கார்ப்பொரேஷன் நடவடிக்கையின் விளைவாக, ஒரு வியாபார கும்பல் மூகாமிட்டு, நல்ல விளைச்சலை அறுவடை செய்திருக்கிறது. இந்திய சர்க்காரின் உத்தியோகஸ்தர்களும் அந்த வியாபாரிகளுடன் கூடிக் கொண்டு ஒரு சிறு ராஜ்யத்தையே நிறுவ முயற்சி எடுத்துக் கொண்டுள்ளனர்."

"கார்ப்பரேஷன் செய்துள்ள கடன் உதவித் தொகையான 15·22 கோடி ரூபாயில் 6·33 கோடி ரூபாயை, கார்ப்பரேஷன் நிர்வாக உறுப்பினர்களாக உள்ள 12 நபர்களில் 6 நபர்களே கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளனர்."

"சுசேதா விசாரணைக் குழு தனது அறிக்கையில், கார்ப்பொரேஷனில் நிர்வாக உறுப்பினர்களாக உள்ளவர்கள் தொடர்பு கொண்டுள்ள தொழில் நிறுவனத்திற்கு, கார்ப்பொரேஷன் கடன் உதவி செய்வது கூடாது என்றும், கார்ப்பொரேஷன் போன்ற நிறுவனம் துளியும் சந்தேகத்திற்கு இடமில்லாததாக இருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறது,—இப்படி இருந்தும், 'அவசியமற்ற கட்டுப்பாடு' என்றும், 'நியாயமற்றது' என்றும் கார்ப்பொரேஷன் நிர்வாகிகள் குறிப்பிட்டிருப்பது வெட்கக் கேடாகும்."

[இந்தியத் துணைக்கண்டத்தின் தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக, தொழிற்சாலைகளுக்குக் கடன் கொடுத்து உதவ யூனியன் சர்க்காரால் 'இன்டஸ்டிரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன்' என்ற பெயரில் ஒரு நிதி நிறுவனம் துவங்கப்பட்டுள்ளது. அதனுடைய நிர்வாக ஊழல் பற்றியும், கடன் கொடுத்து உதவுவதில் அது மேற்கொண்ட ஓரவஞ்சனை பற்றியும் ஏற்கனவே பார்லிமெண்டில் உறுப்பினர்கள் காரசாரமாகக் குற்றச்சாட்டுகளைச் சாட்டினர். அதன் பிறகு, கார்ப்பரேஷன் நடவடிக்கைகளை நன்கு ஆராய்ந்து அறிக்கை செய்ய பார்லிமெண்டு உறுப்பினரான சுசேதா கிருபளானி தலைமையில் குழு ஒன்றை விசாரணை செய்து அறிவிக்க யூனியன் சர்க்கார் நியமித்தது.

விசாரணைக் குழுவின் அறிக்கை பற்றியும், அதன் மீது சர்க்கார் எடுத்த முடிவு பற்றியும் பார்லிமெண்டில் 2-30 மணி நேரம் விவாதம் நடைபெற்றது. விவாதத்தின்போது பார்லிமெண்டு சுயேச்சை உறுப்பினர்களான லங்காசுந்தரம் அவர்கள், கார்ப்பரேஷன் நடைமுறை பற்றி விளக்கிக் கூறியுள்ளார். அதன் சுருக்கம் தரப்படுகிறது.]

டாக்டர் லங்காசுந்தரம் மேலும் கூறியதாவது.—

'தெரிந்தவருக்குத் தாராட்ட சலுகை' உறவினருக்குச் செய்த உதவி' என்பன குற்றச்சாட்டுகளுக்கு கார்ப்பொரேஷன் உள்ளாகவில்லை என்று விசாரணைக் குழு அறிவித்துள்ள கருத்தை தயக்கமின்றி சர்க்கார் ஏற்றுக் கொள்ளுகிறது' என சர்க்கார் கூறுவதற்கு குழு அறிக்கையில் ஆதாரமிருக்கிறதா? விசாரணைக் குழு இப்படி இந்த இடத்தில் கூறி இருக்கிறது என்று சுட்டிக் காட்டுமாறு சர்க்காரை அறை கூவுகிறேன்.

ஆனால், இதற்கு மாறாக, அபேக்ஷேபர்கள் என்று நிர்மாணித்து அக்கறை எதிர்பார்க்கப்பட வேண்டியவர்களுக்கு உயர்ந்த முறையில் பாதுகாப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது என்ற உண்மையை தயை தாட்சண்யமின்றி கண்டித்திருக்கிறது விசாரணைக் குழு."

"விசாரணைக் குழு அறிக்கையில் 40 சத விகித ஏகேலை விழுங்கியுள்ள ஒரு கண்ணாடி தொழிற்சாலை பற்றிய விவகாரத்தை சர்க்கார் அப்படியே இருட்டடிப்பு செய்துவிட்டிருக்கிறது."

"இந்திய சர்க்காரின் உதவிக் காரியதரிசியாக உள்ள ஒருவர் கார்ப்பொரேஷன் சட்டப்படி

(4-ம் பக்கம் பார்க்க)

கல்லக்குடி வழக்கு அப்பீல்

வழக்கறிஞர்கள் வாதம் முடிவுற்றது

9—3—54 அன்று தீர்ப்பு கூறப்படும்

திருச்சி, மார்ச் 5—

4—3—54 அன்று கல்லக்குடி வழக்கு திருச்சி மாவட்ட நீதிபதி திரு. பி. டி. ராமன் நாயர் அவர்கள் முன்னிலையில் அப்பீல் எடுத்துக்கொள்ளப் பட்டது.

முதலில் எதிரிகள் சார்பில் திரு. எம். கபீல் அனந்தர், பி. ஏ., பி. எல். அவர்கள் வாதத்தைத் துவக்கினார், அடுத்து சர்க்கார் வக்கீல் திரு. ஈ. வி. சீனிவாசாச்சாரியார் பேசினார்.

இருவர் வாதத்தையும் கேட்டு, நீதிபதி, வழக்கை 9—3—54-ந் தேதிக்கு மாற்றி அன்று தீர்ப்பு அளிப்பதாகக் கூறினார்.

நேற்று வழக்கைக் காண ஏராளமான தோழர்கள் உள்ளூர் வெளியூர்களிலிருந்து வந்திருந்தனர், (ந: நி.)

கடலுக்குள் எண்ணெய்க் குழாய்!

பம்பாய், மார்ச் 4—

பம்பாய் துறைமுகத்திலிருந்து ... க்கு கிழக்கே 4 மைல் நீளத்திற்கு எண்ணெய்க் குழாய்கள் அமைக்கும் வேலை ஆரம்பமாகி விட்டது. கிழக்கு உலகிலேயே இந்தநான் முதன் முதலாக இத்தகைய குழாய் அமைக்கப் படுகிறது.

கைத்தறித் துணிக்கு விற்பனை வரி விலக்கு

மத்திய சர்க்கார் கோரிக்கை

புதுடில்லி, மார்ச். 4—

எல்லா மாநில சர்க்காரையும், கைத்தறித் துணிக்கு விற்பனை வரி விலக்கு அளிக்குமாறு மத்திய சர்க்கார் கேட்டுக் கொண்டிருப்பதாக மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிச்சை கொடுத்தால் தண்டனை

பம்பாய், மார்ச் 4—

பிச்சைக்காரர்களுக்குத் தருமம் செய்வோரைத் தண்டிப்பதற்காக ஒரு மசோதாவை பம்பாய் சட்டசபையில் ஒரு தனிப்பட்ட உறுப்பினர் கொண்டுவர இருக்கிறார்.

கவர்னர் சம்பளம்

(இந்த ஆண்டிற்கு)

சென்னை, மார்ச் 4—

சென்னை சட்ட சபையில் நிதி மந்திரி சமர்ப்பித்த வரவு செலவு திட்டத்தில் கவர்னருக்கு இந்த ஆண்டில் ரூ. 9,93,000 சம்பளம்—அதாவது, மாதத்திற்கு சுமார் 82,800 ரூபாய் — கீழ்க் கண்ட விவரப்படி கோரப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டை விட இது அதிகம் :—

		ரூபாய்கள்
	அடிப்படைச் சம்பளம்	56,000
	அலவன்ஸ் :—	
1.	விருந்து	23,000
2	சிப்பந்திகள்	59,000
3.	அரண்மனை சிப்பந்திகள்	2,27,000
4	ஒப்பந்த	1,50,000
5.	சுற்றுப் பயணம்	1,18,000
6.	இஷ்ட செலவு	25,000
7.	அரண்மனை பராமரிப்பு	3,35,000
	மொத்தம் ரூ.	9,93,000

கார்ட்டூம், மார்ச் 5—

சூடான் கலவரங்களுக்கும், தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என உம்மா கட்சி அறிவித்துள்ளது.

"நம் நாடு" இதழ் படித்ததற்கு போலீஸ் கொட்டடி வாசம்!

2 மணி நேரம் கழித்து விடுதலை

செங்குன்றத்தில் ஒரு ஆப்பரியர் போலீசாரின் துடுக்கு

செங்குன்றம், மார்ச் 4—

[நமது தி. மு. கழகத்தில் உள்ள பொறுப்புள்ள தோழர் ஒருவருக்கு நேர்ந்துள்ள சம்பவத்தை அவர் எழுதியுள்ளவாறே தரப்படுகிறது.]

செங்குன்றத்தில் (துலுக்கஞ் சத்திரம்) உள்ள நண்பரொருவரின் வீட்டிற்கு, 1-3-54 காலையில் சென்றிருந்தேன். அங்கு 4—3—54 வரை தங்கியிருந்தேன். 3—3—54-ந் தேதி மாலை கடைவீதிக்கு வந்து 'நம் நாடு' இதழ் ஒன்று வாங்கி படித்துக் கொண்டிருந்தேன்; அப்பொழுது அங்கு ஒருவர் உட்கார்ந்து கொண்டிருந்தார்; நான், அந்நேரத்தில், 'நம் நாடு' இதழை படித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு, 'முட்டாள்களின் பத்திரிகையை படிக்கிறாயா?' என்று என்னைப் பேசினார்.

உடனே நான் அவரை இடைமறித்து, 'நாங்கள் அப்படி ஒன்றும் முட்டாள்களல்ல; உங்கள் ஆட்சியிலே அமர்ந்துள்ளாரே ஆச்சாரியார், அவரைச் சொன்னாலும் பொருந்தும்,' என்றேன்.

சில நிமிடம் எங்கள் இருவருக்கும் வாக்குவாதம் நடந்தது.

பிறகு நான் வீடு திரும்பிச் செல்லும்போது அவர் என்னை வழிமறித்து, அவருடனேயே என்னை நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று ஒரு அறையில் தள்ளிப் பூட்டிவிட்டார். இடைமறித்து நான் பேசினேன்; அவர் என்னைப் பேசவிடவில்லை. மாலை 4-30 மணிக்கு என்னை அடைத்தவர் இரவு 6-30 மணிக்கு வெளியே விட்டார்.

பிறகு அவரைப் பற்றி விசாரித்ததில் அவர் ஒரு 'சி ஐ டி.' எனத் தெரிந்தது.

தோழர் எஸ். ஏ. முத்து (நாடார்) மறைவு

அருப்புக்கோட்டை, மார்ச் 4—

நேற்று பகல் அருப்புக்கோட்டையில் எஸ். ஏ. முத்து (நாடார்) அவர்கள் மாரடைப்பினால் இயற்கை எய்திவிட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர், தன்மான இயக்கத் துவக்கத்தில் இருந்து இயக்கத்துடன் ஒன்றுபட்டு, நாடார் சமூகத்திடையே பணியாற்றி வந்தவர். 'நாடார் குல மித்திரன்' என்ற வார இதழ் மூலம் சுயமரியாதை இயக்கக் கருத்துக்களைப் பரப்பி வந்தவர்.

எழுதும் ஆற்றலும், சொற்பொழிவாற்றும் திறனும் அமையப் பெற்றவர் காலஞ் சென்ற முத்து.

அந்தக் காலத்தில் நடைபெற்ற சுயமரியாதை மாநாடுகள் பலவற்றில் காலஞ்சென்ற பெரியார் பங்கு கொண்டு பணி புரிந்திருக்கிறார்.

அவர், பிரிவால் மனம் வெதும்பிக் கிடக்கும், அவரது குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த துக்கத்தை அறிவித்துக் கொள்ளுகிறோம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 5—3—1954 வெள்ளி

சென்னை சர்க்கார் போக்கிற்கு எதிராக காஞ்சீபுரம் நகராட்சி மன்ற முடிவு

மின்சார வினியோக ஏற்பாட்டை திரும்பத் தம்மிடம் ஒப்படைக்கக் கோரிக்கை

சாக்கடைக் கால் ஏற்பாட்டிற்கு காங்கிரஸ் கட்சியினர் எதிர்ப்பு

(நமது விசேஷ நிருபர்)

காஞ்சீபுரம், மார்ச் 4—

மின்சார வினியோக திட்டத்தை நகர சபைக்குத் திருப்பி தர வேண்டுமென எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த தீர்மானம், காங்கிரஸ் கவுன்சிலர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேறியது

மக்கள் புரிந்துகொள்ள இந்நகர சபையின் நடவடிக்கைகள் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்று எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த தீர்மானமும் காங்கிரஸ் கவுன்சிலர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேறியது,

பெண்களுக்கு 'மல அறை' கட்ட வேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானத்திற்குக் காங்கிரஸ் காரர்கள் எதிர்ப்பு காட்டி தோற்கடிக்கச் செய்தனர்.

சாக்கடை கால் கட்ட வேண்டுமென்று எதிர்க் கட்சிக்காரர்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்கும் காங்கிரஸ்காரர்கள் எதிர்ப்பு காட்டி தோற்கடித்தனர்.

★

27—2—54 தேதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நகர மன்றத்தின் இயல்புக் கூட்டம் தலைவர் எஸ். எல்லப்பஞர் தலைமையில் நகர மன்றத்தில நடைபெற்றது.

அதுசமயம் தோழர் எ. கே. ஆள்வார் (கம்) கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரரேபித்தார்:—

"முனிசிபாலிடிகளுக்குச் சொந்தமான மின்சார வினியோகத் திட்டத்தை அரசாங்கத்தார் எடுத்துக் கொண்டது இந்திய அரசியல் சட்டம் 14-வது பிரிவின்படி செல்லத் தக்கதல்லவென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது; இம்முனிசிபாலிடியிடமிருந்து அரசாங்கம் மின்சார வினியோகத் திட்டத்தை எடுத்துக்கொண்டதால் இம்முனிசிபாலிடிக்கு ஏற்பட்ட வரவினக் குறைவைச் சரிகட்ட மின்சார வினியோகத்தை மீண்டும் இம்முனிசிபாலிடிக்கே திருப்பித் தரவேண்டுமென இக்கவுன்சில் சென்னை அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறது."

தீர்மானத்தை தோழர் செல்வராஜ் ஆமோதித்தார்.

எதிர்ப்பின்றி இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. காங்கிரஸ்காரர்கள் தன் முழு ஆதரவையும் தீர்மானத்திற்கு அளித்தனர்.

* * *

நகரசபையின் மின்சார வினியோக திட்டத்தை அரசாங்கத்தார் எடுத்துக் கொண்டதால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தின் குறிப்பு:—

அரசாங்கம் இந்நகர சபையின் மின்சார வினியோகத் திட்டத்தை 1951-ம் ஆண்டு மே மாதம் எடுத்துக் கொண்டது. சொத்தின் மதிப்பு சுமார் 7-லட்சம ஆகும்; அரசாங்கம் நஷ்ட ஈடாக கொடுக்கும் தொகை சுமார் ரூ. 50,000 ஆகும்.

நகரசபை மின்சார வினியோகத் திட்டத்தை நடத்திக் கொண்டு இருந்தபோது ஆண்டு தோறும் நகரசபைக்கு இவ்வினத்தில் வந்துகொண்டிருந்த வருமானம்:

(1) மின்சார நிதியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10,000 இந்நகர மன்றத்தின் பொது நிதிக்குக் கொடுக்கப்பட்டது;

(2) வரி வசூல் செய்பவர்கள் சம்பளத்தில் பாதிக்குமேல மின்சாரக் கணக்கிலிருந்து கொடுக்கப்பட்டது—அதாவது சுமார் ரூ. 8,000 ஆகும்;

(3) நகரசபை கமிஷனர் சம்பளத்தில் பாதி—சுமார் ரூ 3000—இதிலிருந்து கொடுக்கப்பட்டது

ஆக மொத்தம் ரூ. 21,000 நகர சபைக்கு நஷ்டம் என்பதைக் குறிப்பிடத் தேவை இல்லை. 1952 — 53 வரவு — செலவுத் திட்டக் குறிப்பில் கமிஷனர் அவர்களே இதை ஒத்துக் கொண்டுள்ளார்.

★

"இந்நகர சபையின் நிர்வாகத்தை சாதாரண மக்களும் புரிந்துகொள்ளுவதற்காக இனி தமிழிலேயே நடைபெற அரசாங்கத்தார் வழிவகை செய்துதர வேண்டுமென இக் கவுன்சில் அரசாங்கத்தாரை கேட்டுக் கொள்கிறது."

இத்தீர்மானத்தை தோழர் ஏ. கே. ஆள்வார் (கம்) பிரரேபித்து பேசும்போது, "அன்னியன் நம் மொழி வளராது தடுப்பதற்காகவும், சாதாரண மக்கள் புரிந்து கொள்ள முடியாதபடி நிர்வாகத்தை நடத்த ஆட்சி மொழியாக ஆங்கிலத்தை நம்மீது திணித்தான் என்றும், மக்கள் ஆட்சி என்று சொல்லிக் கொள்ளும் இப்பொழுது கூட நாம் ஆங்கிலத்தில் நிர்வாகத்தை நடத்துவது தகாது என்றும், இந்நகர சபையின் நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் இருப்பதால் சாதாரண மக்கள் புரிந்து கொண்டு பதில் அளிக்க முடியவில்லை என்றும், நாம் 'நோட்டீஸ்' கொடுத்தால், அதற்கு பதில் எழுத ஆங்கிலம் தெரிந்தவரிடம் ஓடவேண்டிய நிலைமையில் உள்ளனர் என்றும், ஆகவேதான் இத்தீர்மானத்தை தான் கொண்டுவந்ததாகவும், இதை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

தீர்மானத்தை தோழர் சி. வி. எம். அண்ணாமலை (தி. மு. க) ஆமோதித்தார்.

காங்கிரஸ் கவுன்சிலர்ராஜப்பா தீர்மானத்தை ஆதரித்துப்பேசினார். அதன் பிறகு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

காங்கிரஸ்காரர்கள் மெஜாரிட்டியாக இருந்தும் இத் தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரித்தது குறிப்பிடத் தக்கது.

★

மாதனம்பாளையம் தெருவிற்கும், நடுத்தெருவிற்கும் இடையில், பெண்களுக்கென ஒரு மல அறை கட்ட வேண்டுமென தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

கவுன்சிலர் தோழர் டி. ராஜு பேசும்போது, பெண்களுக்காக மல அறை கட்டிக் கொடுக்கும்படி கையெழுத்திட்ட மகஜர் ஒன்று அவ்வட்டாரத்து மக்கள் கொடுத்துள்ளதாவும், சுகாதார அதிகாரி பார்வையிட்டு, மல அறை கட்டலாமெனத் தெரிவித்துள்ளதாகவும், தாய்மார்கள் அங்குதான் மலம் கழிக்க

(4-ம் பக்கம் பார்க்க)

பிள்ளையார் கோயில் ஆண்டி!

'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்பார்கள். யூனியன் சர்க்கார் நிதி அமைச்சர், சர்க்கார் வரவு-செலவு திட்டத்தை சரிக்கட்ட, சமுதாயத்தில் பிள்ளையார் கோயில் ஆண்டிகள் போலுள்ள சாதாரண ஏழை மக்களை மேலும் சுரண்டவே திட்டமிட்டு விட்டார்.

அவர் போட்டுள்ள மறைமுக வரிகளில், நேரடியாகப் பெரும்பாலான உழைப்பாள மக்களை வாட்டி வதைக்கின்ற பாக்குமீது போடப்பட்டுள்ள வரி பற்றி இரண்டு தினங்களுக்குமுன் விளக்கமாக எழுதியிருந்தோம். அதைத் தொடர்ந்து, அவர் போட்டுள்ள மற்றைய புது வரிகள் குறித்து இன்று எழுதுகிறோம்.

ஆலைத் துணிகளில் உயர்ந்த மெல்லிய ரகத் துணிகளுக்கு கெஜம் ஒன்றுக்கு 0—0—6 பை வீதமும், மற்ற ரகத் துணிகளுக்கு கெஜம் ஒன்றுக்கு 0—0—3 பை வீதமும் எக்சைஸ் வரி போட்டிருக்கிறார். இந்த இரு வரிகள் மூலம் 65 கோடி ரூபாய் கிடைக்குமென அவர் எதிர்பார்க்கிறார். இந்தத் தொகையில் பெரும் பகுதியை கொடுக்கப் போகிறவர்கள் நடுத்தரக் குடும்பத்தினரும் சாதாரணமான குடும்பத்தினருமேயாவர் என்று சொல்லத் தேவையில்லை.

செயற்கை பட்டுத் துணிகளுக்கு கெஜம் ஒன்றுக்கு 0-1-6 அணா வீதம் எக்சைஸ் வரி போடப்பட்டிருக்கிறது. இதோடு, கைத்தறி பாதுகாப்பு என்ற பெயரால் ஆலைத் துணிகள்மீது ஏற்கனவே போடப்பட்டுள்ள செஸ் வரியான கெஜம் ஒன்றுக்கு 0-0-3 பையும் வேறு சேர்ந்து விடுகிறது. இத்துறையில் எதிர்பார்க்கப்படுகிற வருமானம் 160 கோடி ரூபாயாகும்.

அதிக விலை கொடுத்து அசல் பட்டுத் துணிகளை வாங்குவதற்குப் போதிய பண வசதி இல்லாத ஏழைகள் பெரும்பாலும், விசேஷ காலங்களில் இந்தச் செயற்கை பட்டுத் துணிகளையே வாங்குவர் என்பது அனைவருக்கும் தெரியும். குழந்தை குட்டிகளை செயற்கைப் பட்டுத் துணிகளால் அலங்கரித்து கண்ணுக்கழகாகப் பார்த்துப் பூரிப்படைய விரும்பும் சாதாரண குடிபிறந்த மக்கள் இனி கெஜம் ஒன்றுக்கு 0-1-9 அணா கூடுதலாகக் கொடுத்துத்தான் வாங்கி ஆக வேண்டும்.

எல்லா வகையிலும் வாழ்க்கைச் செலவு கூடி வருவதைக் கண்டு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிற பொது மக்கள், செயற்கைப் பட்டு வாங்குவதிலும் அதிகமான தொகையைச் செலவிட வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகிறபொழுது கட்டாயம் காங்கிரஸ் சர்க்காரை, மனமார, வாயார வாழ்த்தத்தான் செய்வார் வாயில் வந்தபடி எல்லாம் சில்லரை கடைக்காரர்களை, அவர்கள் முகத்திற்கு முன்னாக இழிமொழிகளால் அர்ச்சிக்கப்போகிற ஏழை எளிய மக்களையும் நாம் பார்க்கத்தான் போகிறோம்.

இத்துறையில் காங்கிரஸ்சர்க்காருக்கு எதிராகக்கிளம்பும் பொதுமக்கள் எதிர்ப்புஎசலும் இத்துடன் நின்றுவிடும் என்றும் சொல்வதற்கில்லை. இந்தஎரிச்சல், இதுவரை கைத்தறித் துணிகள் மீது பொதுமக்கள் கொண்டிருந்த மோகத்திலும் கைத்தறி நெசவாளர்கள்மேல் வைத்திருந்த அனுதாபத்திலும், கணிசமான அளவில் மன மாற்றத்தை உண்டாக்கினாலும் உண்டாக்கக்கூடும். கைத்தறியாளர்கள் பெயர் கூறி நம்மைச் சுரண்ட ஒரு வழி செய்துகொண்டிருக்கிறது காங்கிரஸ் சர்க்கார் எனப் பொதுமக்கள், யூனியன் சர்க்காரின் கைத்தறிப் பாதுகாப்புக் கொள்கையைத் தவறுகத் தூற்றக் கிளம்பினாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை

கட்டிடங்களுக்கு உபயோகப்படுத்தப்படும் சிமெண்டுக்கும் டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் வரி போடப்பட்டிருக்கிறது. சாதாரண ஏழை மக்களை இந்த வரி நேரடியாகப் பாதிக்கப் போவது கிடையாது என்று சொல்வதில் கொஞ்சம் உண்மை இருந்தபோதிலும், மாநில சர்க்கார்களின் புதிய கட்டிட ஏற்பாடுகள் இந்தச் சிமெண்டு வரி உயர்வால் செலவில் கூடும் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு பவுண்டு கட்டிகளாகவும் அதற்குக் கூடுதலாகவும் உள்ள துணி வெளுக்கும் சோப்புகளுக்கு 112 பவுண்டுக்கு ரூ. 5—4—0 வீதமும், மற்ற துணி வெளுக்கும் சோப்பு அனைத்துக்கும் ரூ 6—2—0 வீதமும் வரி போடப்பட்டு இருக்கிறது. மற்ற உடம்பு தேய்க்கும் சோப்பு எல்லாவற்றிற்கும் ரூ. 14 வரியாக விதிக்கப்பட்டு இருக்கிறது.

காலில் அணியும் செருப்பிற்கு விலை மதிப்பின்மீது நூற்றுக்குப் பத்து ரூபாய் வீதம் வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நான்கு வரிகளின் மூலம் நிதி அமைச்சர் 3·75 கோடி ரூபாய் கிடைக்குமென எதிர்பார்க்கிறார்.

மேற்குறித்த எதுவும் ஆடம்பரப் பொருட்கள் பட்டியலில் சேர்த்து எண்ணக்கூடியதல்லவே அல்ல. மாளிகை வாசிகள் முதல் மண் குடிசையில் வசிப்பவர்கள் வரையில் தங்கள் ஆடைகளைத் துல்லியமாக வைத்துக்கொள்ளவும், உடம்பை சுத்தமாக வைத்துக் கொள்ளவும் நித்தியப்படி உபயோகப்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களாகப் போய் விட்டன. ஓமமண்ணையும், இலுப்பைப் புண்ணாக்கையும் தேடி அலையும் வழக்கம் கிராமங்களை விட்டுத் தொலைந்து போய் பல ஆண்டு காலமாகிவிட்டது. அந்த இரண்டும் நகர மக்களுக்குத் தெரியவே தெரியாது.

சோப்புக்கு வேண்டிய மூலப் பொருட்களின் விலையேற்றத்தின் காரணமாக ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்டுவந்த சோப்பு, சரி பாதியாகக் குறைந்துபோய் இருக்கிறது என்றும், இந்தப் புது வரிகளால அத்தொழில் மேலும் பாதிக்கப்படும் என்றும் தொழில் அனுபவமுடையவர்கள சார்பில சொல்லப்படுகிறது. மேலும், இத்தகைய வரி, 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் போடப்பட்டதாகவும், பொதுமக்களின் எதிர்ப்பின்மீது வாபஸ் பெறப்பட்டதாகவும் அறியக்கிடக்கிறது. 17-ம நூற்றாண்டின பிறபகுதியில் போடப்பட்ட ஒரு வரிக்கு 20-ம நூற்றாண்டின் பிறபகுதி துவக்கத்தில் உயிர் கொடுத்துக் காக்க, நமது நிதி அமைச்சர் முன்வந்திருப்பது வேதனை கலந்த வியப்பாகத்தான் இருக்கிறது.

துணி வெளுப்பவரிடம் துணிகளைப் போட்டுவிட்டு, ஒரு வாரம்வரை காத்திருந்து, மடிப்பு குலையாமல் ஆடைகளை உடுத்தும் மேனாமினுக்கிகளை வேண்டுமானல், இந்த சோப்பு வரி பாதிக்காமல இருக்கலாம். ஆனல, ஒத்தை சட்டையும், ஒத்தை வேட்டியும் வைத்துக் கொண்டு, அவசியம் ஏற்படும்போது சோப்புப் போட்டுத் துவைத்து, வெள்ளையாக உடுத்திக் காலங்கழிக்கும் மக்களை, இந்த சோப்பு வரி பாதிக்கத்தான் பாதிக்கும்.

செருப்பின்மீது போடப்பட்டுள்ள வரியும் இது போன்றதுதான். இந்தப் புது வரியினல இதுவரை ரூ. 5-க்குக் கிடைத்துவந்த செருப்பை, நிதி அமைச்சர் பெருங் கருணையால் ரூ 5-8-0க்குத் தாராளமாகப் பொதுமக்கள் வாங்கிக் கொள்ளலாம.

இப்படி மறைமுக வரியைப் போட்டு யாருக்குச் சலுகை செய்திருக்கிறார் நிதி அமைச்சர் சிந்தாமணி தேஷ்முக் என்பதை பிறகு எழுதுவோம்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

திருநெல்வேலி, மார்ச். 3—

தூத்துக்குடி கலவர வழக்கு விசாரணை, பிப். 25, 26-ந் தேதிகளில் விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் எஸ். அரிகர அய்யர் முன்பு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் புலன் விசாரணை நடத்திய சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பி. என். கிருஷ்ணப்பர் 109-வது பிராசிகியூஷன் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

அவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"முத்தாலம்மன்புரம் வழக்கு சம்பந்தமாக சென்ற ஜூலை 15ந் தேதி விளாத்திகுளத்தில் நான் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தேன்; அன்று தூத்துக்குடி போலீஸ் டெபுடி சூப்பிரண்டமிருந்து என்னை உடனே தூத்துக்குடிக்கு வருமாறு தந்தி கிடைத்தது; உடனே நான் தூத்துக்குடிக்குச் சென்றேன்; இவ்வழக்கு சம்பந்தமாக எப். ஐ. ஆர். நகல்களைப் பெற்றேன். அப்போது முதல் எதிரி, இரண்டாம் எதிரி உட்பட 58 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்; இச்சம்பவத்தில், காயமடைந்ததால், 39 முதல் 42-வது எதிரிகள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தனர்; 14 பிரேதங்களுக்கு மேல் டெபுடி தாசில்தார் பிரேத விசாரணை நடத்தினார்; ரிப்போர்ட்டுகளின் நகல்களைப் பெற்றுக்கொண்டு, தூத்துக்குடி போலீஸ் டெபுடி சூப்பிரண்டெண்டு உத்தரவுகளின்படி புலன் விசாரணை நடத்தினேன்; ஜூலை 16-ந் தேதி சப்-இன்ஸ்பெக்டர் மாமன்னானை (108-வது பிசா) விசாரித்தேன்; அவர் என்னை மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று சம்பவம் நடந்த இடத்தைக் காட்டினார்; நான் பிளான் ஒன்றைத் தயாரித்தேன்;

"தூத்துக்குடி நகரம் கடற்கரை மீதுள்ளது; நகருக்குக் கிழக்கே கடல்; இரு ரயில்வே நிலையங்கள் இருக்கின்றன; ஒன்று தூத்துக்குடியிலும், மற்றொன்று டிவிடி மேலூரிலும் இருக்கிறது; இரு நிலையங்களுக்கிடையே உள்ள தூரம் சுமார் 6 பர்லாங்குகள்; இரு நிலையங்களிடையே லெவல் கிராஸிங்குகளுடன் கூடிய இரு கேட்டுகள் இருக்கின்றன; மேலூர் ரயில் நிலையத்தின் பிளாட்பாரத்தை ஒட்டி ஆண்டாள் தெரு இருக்கிறது; மேல்புறத்தில், மேலூர் ரயில்வே நிலையத்திற்கு அப்பால் மற்றொரு ரயில்வே கேட் இருக்கிறது; கேட்டுக்கு அப்பால் எட்டயபுரம் பாதைக்குக் குறுக்கே ரயில் பாதை தாண்டுகிறது; ரயில்வே பாலங்களும் இருக்கின்றன. மேலூர் ரயில்வே நிலையத்தையும் பார்வையிட்டேன்; பூமியில் சிந்தியிருந்த என்ணெய்க் கறைகளைக் கொண்டு என்ஜின் நின்ற இடத்தையும், கண்டுபிடித்தேன்; ரயில் பாதையின் இருபுறத்திலும் பாதைக்கு 25 அடி தூரத்தில் இரும்பு வேலிகள் இருந்தன; வடக்கேயிருந்த இரும்பு வேலிக்கு வடக்கே ஆண்டாள் தெரு இருக்கிறது; அது கிழக்கு மேற்காக இருக்கிறது; அதற்கு எதிரில் தெற்கு நோக்கி ரஹ்மதுல்லாபுரம் வீதி இருக்கிறது; மேலூர் ரயில்வே நிலையத்தின் அருகே பத்திரகாளியம்மன் கோவிலுக்கு மேற்கில் உள்ள ரஹமதுல்லா புரத்துக்கு ரயில் பாதையைத் தாண்டி சந்தகோபாலபுரத்திலிருந்து மக்கள் செல்லலாம்; ரஹமதுல்லாபுரத்திற்குச் செல்லும் சந்து ஒன்றும் இருக்கிறது; பாதைக்கும் சந்துக்கும் இடையே இடைவெளி இருக்கிறது; ரயில் பாதை பூராவிலும் கற்களும், உடைந்த ஓடுகளும் காணப்பட்டன; மேலூர் ரயில்வே நிலையத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தையும் பார்வையிட்டேன் சொக்கலிங்கம் பிள்ளை வீட்டுக்கே ரத்தக் கறைகள் இருந்ததைக் கண்டேன்; இங்குதான் சீனிவாசம் பிள்ளையின் பிரேதம் கண்டுபிடிக்கப்பட்டது; ஆண்டாள் தெருவிலும் ரத்தக்கறைகள் இருந்ததைக் கண்டேன்; பஜனை மடம் படிகள் மீதும், போலீஸ் லாரி நின்ற இடத்திலிருந்தும் ரத்தக் கறைகள் இருந்ததைப் பார்த்தேன்; லாரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட காயமுற்றவர்களது ரத்தமாயிருக்கலாம்; மின்சார கம்பத்தின் மின்சார பல்புகளும் உடைந்து கிடந்திருப்பதைக் கண்டேன்; மற்றொரு விளக்குக் கம்பத்தில் 6 அடி உயரத்தில் குண்டு ஒன்று துளைக்கப்பட்டிருப்பதையும் பார்த்தேன்.

"புதுக் கிராமத்துக்குச் செல்ல பல வழிகள் இருக்கின்றன; மேலூர் ரயில்வே நிலையத்திற்கும், புதுக் கிராமத்துக்கும் இடையே 6 பர்லாங்குகள் உள்ளன; புதுக் கிராமம் சுப்பையா வித்தியாலயம் ஆண்கள் பள்ளியிலிருந்து புதுக் கிராமம் சுமார் 6 பர்லாங் தூரமிருக்கும்; மேலூர் நிலையத்திற்குக் கிழக்கே கனக சபாபதி பிள்ளை தெரு ரயில்வே பாதையை ஒட்டி கிழக்கு—மேற்காக இருக்கிறது; இத்தெருவுக்கு தெற்கே தெப்பகுளம் தெருவிருக்கிறது; சீதா விலாஸ் காப்பி ஓட்டல் உள்ள கிழக்கு தேரடித் தெரு மேலூர் ரயில்வே நிலையத்திலிருந்து சுமார் 2 பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது; சிவன் கோயில் தெரு மேலூர் ரயில்வே நிலையத்திலிருந்து 2 பர்லாங்கு தூரத்திலிருக்கிறது; ஜூலை 15ந் தேதி நான் இப்பிரதேசத்திற்கான பிளானைத் தயாரித்தேன்.

'ஜூலை 15ந் தேதி புதுக்கிராமத்தில் சம்பவம் நிகழ்ந்த இடங்களைப் பார்வையிட்டேன்; சம்பவத்தின்போது சேதமடைந்த சாமான்களைப் பார்த்தேன்; சேதமடைந்த சாமான்களைக் கைப்பற்ற சப்-இன்ஸ்பெக்டர் எனக்கு உதவி புரிந்தார்; 58வது சாட்சியின் வீட்டைப் பார்வையிட்டேன், வீட்டின் வாயிற்படியிலிருந்து நடைபாதையை கடந்தால் 2 ஹால்கள் இருக்கின்றன; இரு ஹால்களுக்கிடையே ஒரு வாயிற்கதவு உண்டு; இதற்கு அப்பால சமையல் அறை சமையல் அறைக்கு வடக்கே திறந்தவெளியாயிருக்கிறது; குழாய்க் கிணறும் குழாயும் மாட்டு கொட்டகையும் இருக்கின்றன; இவற்றைச் சுற்றிலும் காம்பவுண்டு சுவர் உண்டு; சமையல் அறைக்கும் கொல்லைபுறத்திற்கும் இடையே ஒரு வாயிற்படி உண்டு.

'6-வது சாட்சி நாகராஜ அய்யர் வீட்டையும் பார்வையிட்டேன்; வீட்டின் 'பிளான்' ஒன்றையும் தயாரித்தேன்; வீட்டின் முன்புறத்தின் காம்பவுண்டு சுவரும், திறந்த வெளி உண்டு; கட்டடத்திற்குமுன் இரும்பு கிராதி உண்டு; வாசலிலிருந்து மற்றொரு அறையும், பிறகு ஹாலும், சமையல் அறை, ஒரு அறை, குளிக்கும் அறை, கொல்லைப்புறம் இவைகள் உண்டு; கொல்லைப்புற காம்பவுண்டு சுவரில் ஒரு வாயிற்படி உண்டு; இக்கதவை திறந்தால் கோனூர் தெருவை அடையலாம்; காம்பவுண்டு சுவர் 6 அடி உயரமிருக்கும்; உடைந்த சிமிட்டி குழாயையும், உடைந்த பாத்திரங்களையும் கண்டேன்; பல சாட்சிகளின் வீட்டில் சேதமடைந்த சாமான்களைப் பார்த்தேன்.

"57வது சாட்சியின் வீட்டைப் பார்வையிட்டேன்; அங்கிருந்த கெடிகாரம் காலை 10-25-ல் நின்று போயிருந்ததைப் பார்த்தேன்.

"எதிரிகளைக் கைது செய்தபின், மதுரை சிறையில் ரிமாண்டில் வைத்தேன்; எதிரிகளை ஒரே இடத்தில் வைத்திருக்க நெல்லை கலெக்டருக்கு எழுதினேன்; காசி என்ற எதிரி சப்-மாஜிஸ்திரேட்முன் சரணடைந்தார்; 'சப்-மாஜிஸ்திரேட்டைக் கேட்டுக்கொண்டு கொக்கரைக்குளம் சப்-ஜெயிலில் அடையாள அணிவகுப்பு நடத்தினேன்; நான் கேட்டுக்கொண்டதின் பேரில் நெல்லை சப்-மாஜிஸ்திரேட் அடையாள அணிவகுப்பு நடத்தினார்."

திரு. பி ஏ. தங்கசுவாமியால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"தூத்துக்குடிக்கு வந்தவுடனேயே இவ்வழக்கை எடுத்துக்கொண்டேன்; அப்போது சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ராஜு, அந்த சர்க்கிளில வேலை பார்த்தார்; பிறகு இவ்வழக்கை புலன் விசாரிக்க எனக்கு மேல் அதிகாரிகள் உத்திரவிட்டனர்; யாரும் புலன் விசாரணையை ஆரம்பிக்கவில்லை என போலீஸ் டெபுடி-சூப்பிரண்டெண்டு என்னிடம் கூறினார்; புலன் விசாரணை ரிகார்ட் எதுவும் அழிக்கப்படவில்லை; என் டைரியைப் பார்க்காமல் சேதம் பற்றி விவரங்களை தெரிவிக்க முடியாது.

"புதுக் கிராமத்திற்குத் தெற்கேயுள்ள பிரதேசம் பழைய கிராமம் என்று அழைக்கப்படுகிறதா என்பது எனக்குத் தெரியாது; ஸ்ரீகுளத்து அய்யர் வீட்டிற்கு பின்புறத்தில் சில வீடுகள் இருக்கின்றன; அதற்கு வடக்கேயும், விக்டோரியா எக்ஸ்டென்ஷன் ரோடை ஒட்டியும் உயர் நிலைப்பள்ளி இருக்கிறது; இப்பள்ளிக்குத் தெற்கே தேவர்புரம் இருக்கிறது; பருத்திக்கொட்டை நீக்கும் தொழிற்சாலை ரோடுக்கு மேற்கிலும், விக்டோரியா எக்ஸ்டென்ஷன் ரோடுக்கு வடக்கிலும், பாளையங்கோட்டை ரோடுக்குத் தெற்கிலும் மக்கள் வசிக்கின்றனர்; இப்பிரதேசத்தின் பெயர் எனக்குத் தெரியாது; இங்கு பெரும்பாலோர் பார்ப்பனரல்லாதவர்களே வசித்து வந்தனர்; செண்பகபுரம், சேவகிபுரத்திலும் இத்தகைய வகுப்பினர்கள்தான் பெரும்பான்மையினராக வசித்து வந்தனர்; தூத்துக்குடி சப்-ஜெயில் இருக்குமிடம் தெரியும்; சிரைம் பிராஞ்சு பேர்லீஸ் நிலையத்திற்கு வடகிழக்கே அது இருக்கிறது; அதே கட்டடத்தில் மத்திய அறை போக்குவரத்து இலாகா வசத்தில் உள்ளது; அது சிரைம் பிராஞ்சு போலீஸ் நிலையத்துடன் இணைக்கப்படவில்லை; இரு தனி அறைகள் இருக்கின்றன; பழைய ரிகார்டு அறையும், சாமான் அறையும் இருக்கின்றன; தென் புறத்தில் ஒரு கதவும், சாமான் அறைக்குகிழக்குப் புறத்தில் ஒரு ஜன்னலும் இருக்கின்றன; சப்-ஜெயில் கட்டிடத்திற்குச் செல்லும் ஒரு கதவும் இருக்கிறது

"ஆண்டாள் தெருவில் உள்ள கான்மாபாலிடன் கிளப் காம்பவுண்டு சுவரில் குண்டு பாய்ந்ததற்கான அறிகுறி இல்லை; பிராசிகியூஷன் சாட்சிகள் விசாரிக்கப்பட்டபோது சம்பவங்களை விவரித்தனர்; அவசியமானபோது கேள்விகளும் கேட்கப்பட்டன; சில சமயங்களில் அவர்கள் எதிரிகளின் பெயர்களையும் கூறினர்; 3-வது பிராசிகியூஷன் சாட்சி தமிழ் பண்ணையாரை கிரைம் பிராஞ்சு விசாரித்ததாக நினைக்கிறேன; ஜூலை 24-ந் தேதி 12-வது பிராசிகியூஷன் சாட்சி சங்கர நாராயணனை நான் விசாரிக்கவில்லை; மாரிமுத்து தேவர் விசாரிக்கப்படுகையில் அவர் பிரசன்னமாயிருந்தாரா என்பது எனக்குத் தெரியாது; என்ன செய்ய வேண்டுமென்பது பற்றி தலைவர்கள் பேசிக்கொண்டிருந்ததாக 4-வது சாட்சி வெங்கடசாமி நாயுடு என்னிடம் கூறினார்; ஆட்சேபத்தைத் தெரிவிக்க அடையாளமாக ரயில் வண்டிகளை நிறுத்தப் போவதால் தங்களைத் தொண்டர்களாகச் சேர்க்க விரும்பவில்லை என்று நயினார் பண்ணையாரும், கோதண்டராம பண்ணையாரும் என்னிடம் கூறினார்; ராஜாவை, கருப்பசாமி விசாரித்ததற்கான தஸ்தாவேஜு இல்லை; போலீஸ் சுடுவதற்குமுன் தான் எச்சரிக்கையைக் கேட்டதாக இந்தச் சாட்சி கூறியதாக வழக்குக் குறிப்பேட்டில் குறிப்பிடப்படவில்லை; கூட்டத்தினர் போட்ட ஒலிகள் பற்றி 12-வது பிராசிகியூஷன் சாட்சி கூறியது பற்றியும் வழக்குக் குறிப்பேட்டில் கண்டிருக்கவில்லை; 13-வது சாட்சி புதுக் கிராமத்தில் விசாரிக்கப்பட்டார்; கந்தசாமியை நான் விசாரிக்கவில்லை; ஆனால் அவர் கொடுத்த வாக்குமூலத்தை நான் எடுத்துக் கொண்டேன்; கலவரக்காரர்கள் தம் வீட்டின் கதவைத் தட்டியதாகவோ, தம்மீது கல்லெறிந்ததாக ராமசாமி அய்யர் கூறியதாக வழக்கு குறிப்பேட்டில் குறிப்பிடப்படவில்லை; பரமார்த்தலிங்கத்தை எங்கு விசாரித்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை; கணேச அய்யர் வீட்டின் ஒரு பகுதியில் தாம் கடை வைத்திருந்ததாக கருப்பசாமி பண்ணையார் கூறினார்; தி. மு. கழக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள ஜூலை 14-ந் தேதி ஹார்வி மில்லைச் சேர்ந்த சுமார் 150 பேர் லீவுக்கு மனுச் செய்து கொண்டதாகவும், லீவ் மறுக்கப்பட்டதாகவும் கந்தசாமி பிள்ளை என்னிடம் கூறினார்; மேலூர் நிலையத்தில் ரயில்வே என்ஜின் முன் உட்கார்ந்து கொண்டிருந்தவர்களைப் பார்த்ததாக 60-வது சாட்சி பாஸ்கரன் கூறியதாக வழக்குக் குறிப்பேட்டில் குறிப்பிடப்படவில்லை; போலீசார் வந்ததைத் திருப்பி வந்தது பற்றி 60-வது சாட்சி பரமசிவன் குறிப்பிட்டார்; போலீசாரைக் கார்டு கூட்டம் கலைந்து சென்றதாகவும் அவர் கூறியதாக குறிப்பேட்டில் குறிப்பிடப்படவில்லை; கிரேட் காட்டன் ரோடில் தந்தி நிலையம் இருப்பது எனக்குத் தெரியும்; இது, புதுக் கிராமத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது; புது மார்க்கெட் இருக்குமிடம் தெரியாது; ஜிம்கானா கிளப் அருகே மார்க்கெட் ஒன்றிருப்பது எனக்குத் தெரியும்; இது புதுக் கிராமத்திலிருந்து சுமார் 6 பர்லாங் தூரத்தில் உள்ளது."

பாண்டியனார் நினைவு நாள்

முதலியப்பட்டி, மார்ச். 3—

மறைந்த மாவீரர் சௌந்திர பாண்டியனார் மூன்றாவது நினைவு நாள் கூட்டம் 22—2—54 காலை 9-மணிக்கு தோழர் ஆர். பாலசுப்பிரமணிய அய்யர் தலைமையில் எஸ். ஏ. வி. சாலை பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் வீ. வெங்கடேசன் பாண்டியனாரின் சிறப்பான பொதுநலத் தொண்டினை பற்றி சொற்பொழிவாற்றினார். தலைவர் முடிவுரையில் அன்னாரின் கல்விக்கான தொண்டினைப் பாராட்டிப் பேசியபின், இந்தப் பள்ளிக்கூடம் 25 ஆண்டுகளுக்கு முன்னர் பாண்டியனாரால் திறந்து வைக்கப்பட்டது என்றும் அவருடைய சேவை பாராட்டுதற்குரியது என்றும் கூறினார். பாண்டியனாரின் நினைவு நாளை முன்னிட்டு 22—2—54ல் பள்ளிக்கூடத்துக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

உறந்தை தி. மு. கழகம்

திருச்சி, மார்ச். 3—

28—2—54ல், செயற்குழு உறுப்பினர் கூட்டம் தோழர் சி. மாரியப்பன் தலைமையில், திருத்தாந்தோணி ரோடு பசு மடத்தில் நடைபெற்றது. அதுபோது, கழக நிதிக்காக ஏப்ரல் முதல் வாரத்தில் ஒரு நாடகம் நடத்துவதெனவும், கழகத்திற்கு மார்ச்சு மாதம் முதல் ஒரு இடம் வாடகைக்கு அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

திசையன்விளை தி. மு. கழகம்

21-2-54 மாலை 3-30 மணிக்கு தோழர் கே. பி தேவேன் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, இவ்வாண்டிற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ஆ. க. திருவடி முத்து; துணைச் செயலாளர்: என். வி. பெருமாள்; பொருளாளர்: மா. தி முத்து; மாவட்டப் பிரதிநிதி: ஆ. க. சுப்பையா; செயற்குழு உறுப்பினர்கள்:—கே. வி. தேவேன், அனந்தபத்மமார்த்தாண்டம், சு. கிருஷ்ணன், எம். பழனி, எம். என். முத்துசாமி, பி துரைராஜ், கே. சாமி, எம். வீரபாகு, வா. ராமமூர்த்தி, வி. சுடலைமுத்து, தே. பொன்னையா, என் சிவஞானம், என். செல்லையா, கே. என். மாணிக்கம் என். மந்திரம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நீடாமங்கலம் தி. மு. கழகம்

22-2-54-ல், சீனிவாச பிள்ளை சத்திரத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் இவ்வாண்டுக்கு நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: கோ. ராமானுசம்; துணைச்செயலாளர்: எம். என். பன்னீர் செல்வம்; பொருளாளர்:- பி. ராசு; விளம்பர உறுப்பினர்: பி. இ. எம். ஜின்னு; துணை விளம்பர உறுப்பினர்:- பு. என். சாமி; மாவட்ட உறுப்பினர்:- என். எஸ். சாரங்கபாணி; செயற்குழு உறுப்பினர்கள்: ஜெ. ராமநாதன், ஆ. சுப்பிரமணியம், ஆர். ராமு, எஸ். ஆறுமுகம், மா வடிவேல், வி. கே. வி. எம். சையது முகமது; வி. என். சுந்தரேசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வாணியம்பாடி பிர்க்கா விவசாயிகள் சங்கம்

வாணியம்பாடி.(வ ஆ)மார்ச். 3—

28—2—54ல், சங்க நிர்வாகக் குழு கூட்டம் தோழர் வி. என். ததப்பன் தலைமையில் கூடி, பாலாறு அணைக்கட்டுதிட்டத்தை உடன் அமுலாக்கக் கோரியும், நகரில் கம்பளித் தொழிற்சாலை சென்னை அமைச்சர்களைச் சந்தித்து கோரிக்கையைச் சமர்ப்பித்து ஜூன் மாத முதல் வாரத்தில் தூதுக் குழு அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது.

மதகுபட்டி திருவள்ளுவர் மன்றம்

22—2—54-ல் தோழர் பி. திருஞானம் தலைமையில் மன்றம் நிறுவப்பட்டு, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: எ. ஸ். வி. மலையாண்டி; துணைச் செயலாளர்: கா. பொன்னுசாமி; பொருளாளர்: எ. இஸ்மாயில்; விளம்பர உறுப்பினர்: கே. ஆர். முத்தையா; செயற்குழு உறுப்பினர்கள்: பி. கருப்பையா, வெ. காத்தப்பன், சி. சின்னத்தம்பி, அ. தாணி, சுப ராஜேந்திரன், அ. குளத்தான், ம. சேது ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செல்வபுரம் தி.மு. கழகம்

கோவை, மார்ச். 3—

28—2—54 காலை 10 மணியளவில் கழகப் புத்தாண்டுத் தேர்தல் நடைபெற்றது தோழர்கள் செயலாளர். உலகநாமுடி; துணைச் செயலாளர்: அ. செஞ்சேரன்; பொருளாளர். அம்மாசை; செயற் குழுவினர்கள்: இரா. சுந்தரம், அ நடராசன், கு. கதிரமுது, ஆர் ஆறுமுகம். கழகத்தின சார்பில் நடைபெறும் பாண்டியன் படிப்பகத்திற்கு தோழர்கள் உலகநாமுடி பொறுப்பாளராகவும், சுந்தரம் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு—கொச்சி நிலைமை

ராஜப் பிரமுகர் செய்யப் போவதென்ன?

திருவனந்தபுரம், மார்ச் 4— கட்சித் தலைவர்களின் தேர்வு பற்றி உத்தியோக முறையில் அறிவிப்பு கிடைத்தபின், கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப்படுமெனவும், சர்க்காரை அமைக்குமாறு எந்தக் கட்சித் தலைவரையும் கேட்பதற்கு முன்பு பல்வேறு குழுத் தலைவர்களையும் அழைத்து, திரு-கொச்சி ராஜப் பிரமுகர் பேசுவார் எனவும் தெரிகிறது.

திரு-கொச்சி அசெம்பிளியின் காங்கிரசுக் கட்சித் தலைவராக பி. கோவிந்த மேனன் தேர்ந்தெடுக்கப்பட்டார். ராஜப் பிரமுகருக்கு இது உடனே அறிவிக்கப்பட்டது.

அசெம்பிளிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 59 உறுப்பினர்கள் கொண்ட குழுவின் தலைவராகத் தன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களென்று, ராஜப் பிரமுகருக்கு திரு—கொச்சி பிரஜா — சோஷலிஸ்டு கட்சித் தலைவர் பட்டம் தாணு பிள்ளை அறிவித்துவிட்டதாகத் தெரிகிறது.

இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி, பி.-சோ., சுயேச்சை ஆக 59 உறுப்பினர்களின் கூட்டுபலம் 118 பேர் கொண்ட அசெம்பிளியில் இருக்கிறது.

உதவி நிதி.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படி நடைபெற வேண்டுமென அறிக்கை விட்டு விட்டு, பிறகு தாமே அதன் நிர்வாகிகளில் ஒருவராக பங்கு பெற்று, மேற்கொண்டு சர்க்காரின் காரியதரிசி என்ற முறையில் விசாரணை குழு அறிக்கை மீது சர்க்கார் கொண்டுள்ள தீர்மானத்தில், அதுவும் அந்த கார்ப்பரேஷன் பற்றிய விவகார தீர்மானத்தில், கையொப்பம் இட்டிருக்கிறது. இதுபோன்ற சம்பவமொன்று என்றும் நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை"

[இதுபற்றி சுதேசமித்திரன் கூறியுள்ளது நாளை தரப்படும்]

"மதுவிலக்கு சாத்தியமில்லை"

—:—

"மற்ற மாநிலங்களிலும் மதுவிலக்கு தோற்றது!"

வங்க சட்டசபையில் மந்திரி அறிவிப்பு

கல்கத்தா, மார்ச் 5— மாநிலத்தின் தற்போதைய நிதி நிலைமையை முன்னிட்டு பூரண மதுவிலக்கு சாத்தியமல்லவென்று வங்க சட்டசபையில் மந்திரி என். பி. பர்மன் தெரிவித்தார்.

மதுவிலக்கு அமுலாக்கப்பட்ட மாநிலங்களில் எல்லாம் அநேகமாக மதுவிலக்கு தோற்றுவிட்டது என்றே கூறவேண்டுமென்று அவர் குறிப்பிட்டார்.

மதுவிலக்கின் காரணமாக கள்ளச் சாராயம் காய்ச்சுவது அதிகரித்து விட்டதென்பதை ஒப்புக்கொள்கிறேன்; அதை அடக்க தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகவும் அவர் மேலும் கூறினார்.

பாக் - சர்க்காருடன் கபார்கான் பேச்சு

லாகூர், மார்ச் 4— கான் அப்துல் கபார்கான் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலைச் சந்தித்து ஒருமணி நேரம் பேசினார். என்ன பேசினார் என்பது வெளியிடப்படவில்லை.

செஞ்சட்டைப் படையின் மீதுள்ள தடையை ரத்துச் செய்வது பற்றி பாக் - சர்க்கார் தீவிரமாக யோசித்து வருவதாகத் தெரிகிறது.

****

திருச்சியில் மாபெரும் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

—o—

7—3—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு, திருச்சி புத்தூர் சின்ன மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்

☆

சொற்பொழிவாளர்கள்:

C. N. அண்ணாதுரை	C. P. சிற்றரசு
இரா நெடுஞ்செழியன்	காஞ்சி-கல்யாணசுந்தரம்
ஈ. வெ. கி. சம்பத்	K. K. நீலமேகம்
மு. கருணாநிதி	J. P. சோமசுந்தரம்
K. A. மதியழகன்	K. M. கண்ணபிரான்
N. V. நடராசன்	C. V. M. அண்ணாமலை
K. மனோகரன்	A. V. P. ஆசைத்தம்பி
S. முத்து	A. L. C. கிருஷ்ணசாமி
N. S. இளங்கோ	பாலகுருசாமி

தோழியர் சத்தியவாணிமுத்து மற்றும் பொதுக் குழு உறுப்பினர்கள் சொற்பொழிவாற்றுவர்

****

வேலையின்மையை ஒழிக்க 313 திட்டங்கள்!

—:o:—

74 கோடி செலவு—சென்னைக்கு எவ்வளவு?

புதுடில்லி, மார்ச் 4— வேலையின்மை ஒழிப்பு சம்பந்தமாக பல்வேறு மாநிலங்கள் சமர்ப்பித்த திட்டங்களை மத்திய சர்க்கார் அங்கீகரித்திருப்பதாக மக்கள் சபையில் திட்ட மந்திரி தெரிவித்தார்.

மாநிலத் திட்டங்களில் சில திருத்தங்களும், அபிவிருத்திகளும் செய்யப்பட்டிருக்கிறது.

அபிவிருத்தித் திட்டத்திற்காக 34 கோடி ரூபாயும், பற்றாக்குறை பிரதேசங்களை நிரந்தரமாக அபிவிருத்தி செய்ய ரூ 40 கோடியும் செலவிடவும் கேட்கப்பட்டுள்ள மாநில சர்க்கார் யோசனைகளை அங்கீகரித்திருப்பதாகவும், மொத்தம் இதில் 313 திட்டங்கள் அடங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இவை, ஐந்தாண்டுத் திட்டங்களில் அடங்கியுள்ளவைத் தவிர புதிதாக மேற்கொள்ளப்படும் திட்டங்களாகும்.

இதில் சென்னை மாநில அபிவிருத்தித் திட்டங்களுக்காக 2 கோடி 64 லட்சம் ரூபாயும், ஆந்திர திட்டங்களுக்காக 6 கோடி 6 லட்சம் ரூபாயும் கிடைக்கும்.

கல்வி பயிற்சி பெற்றவர், சுமாராக பயிற்சி பெற்றவர். பயிற்சி பெறாதவர் ஆகியவர்களுக்கு எந்த அளவுக்கு வேலை கொடுக்க முடியும் என்பதை மதிப்பிடுவதற்கு தேவையான விவரங்களை மாநில சர்க்கார்களை மத்திய சர்க்கார் கேட்டிருப்பதாகவும் கூறினார்.

—o—

நிர்ப்பந்தத்தின் மூலம் வரி வசூலா?

மந்திரி மாணிக்கவேலர் கூறுவதென்ன?

சென்னை, மார்ச் 4— சென்ற ஆண்டில், விவசாயிகளிடமிருந்து ரூ 3,91,418 நிலவரி பாக்கியை சர்க்கார் நிர்ப்பந்த முறையில் வசூல் செய்தனர்," என்று மந்திரி மாணிக்கவேலர் சட்டசபையில் கூறினார்.

"இந்த எல்லா வரி-யும் வசூலாகாமல் போனால், பின்னர் தான், வரி வசூல் செய்யும் சர்க்கார் கெடுபிடி முறையை மேற்கொள்ளுகின்றனர்; அதையும் பல சந்தர்ப்பங்களில், சட்டசபை உறுப்பினர்களின் சிபாரிசுகளை மதித்து ஒத்திவைத்திருக்கிறோம்," என்று அவர் மேலும் கூறினார்.

அரசாங்க வக்கீல் நியமனம்

மீண்டும் சட்டசபையில் கேள்வி

சென்னை, மார்ச். 4— திருச்சியில் அரசாங்க வக்கீல் வேலைக்கு நியமனம் செய்யப்பட்டது குறித்து சென்னை சட்டசபையில் மீண்டும் கேள்விகள் கேட்கப்பட்டன.

"அந்தப் பதவிக்கு கைகேயனை தகுதியற்றவர் என்று கூறியது. கலெக்டரா, ஜில்லா மாஜிஸ்திரேட்டா?" என்று தோழர் ஏ. கோவிந்தசாமி கேட்டதற்கு, மந்திரி பதிலளிக்கையில், "அது பற்றிய விவரம் சொல்வது பொதுஜன நன்மைக்கு உகந்தது அல்ல" என்றார்.

நீதி நிர்வாகப் பிரிவினை

—:—

மேலும் 3 மாவட்டங்களில் அமுலாக்கப்படும்

சென்னை, மார்ச் 4— முதலில் சென்னை நகரிலும், அதன் பின்னர் இரண்டு மாவட்டங்களிலும் நீதி — நிர்வாகப் பிரிவினை திட்டம், ஜூலை மாதத்தில் விரிவாக்கப்படும் என்று சென்னை சட்டசபையில் சட்ட மந்திரி அறிவித்தார்.

"ஆயுள் தண்டனை"க்குத் தடை!

சென்னை, மார்ச். 4— இம்மாநிலத்தின் எந்த இடத்திலும், பொது மேடையிலும் "ஆயுள் தண்டனை" என்ற நாடகத்தை நடக்கக்கூடாது என்று சென்னை சர்க்கார் தடைவிதித்துள்ளனர்.

தடை செய்யப்பட்டுள்ள "பணக்காரன்" என்ற நாடகமே 'ஆயுள் தண்டனை' என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளதாக சர்க்கார் கருதுகிறதாம்!

நன்கொடை!

தஞ்சை, மார்ச் 4— திருத்துறைப் பூண்டி எக்கல் கிராமத்திலுள்ள ரூ 2 லட்சம் பெறுமானமுள்ள 210 ஏக்கர் நிலத்தை சிங்கிப்பட்டியிலுள்ள காந்தியார் நினைவு கூடமாக ஆம்பத்திரிக்கு காலஞ்சென்ற செடும்பலம் தோழர் என். ஆர். சாமியப்பா அவர்கள் உயிலில் எழுதிவைத்துள்ளார்.

கழகக் கூட்டங்கள்

★

நீடாமங்கலம்

7—3—54 மாலை 6 மணிக்கு

இடம்: சீனிவாச பிள்ளை சத்திரத்திற்கு எதிரில்

பேசுவோர்:

சிற்றுலி சுப்ரமணியம்

கிருட்டினமூர்த்தி

★

பொன்னமராவதி

8—3—54 மாலை 6 மணிக்கு

இடம்: அண்ணா திடல்

தலைவர்: நல்ல. சுப்பையா

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

நல்ல. மணியன்

முத்துக் கலிங்கன்

வள்ளுவர் வாசக மன்றம்

★ ✓

7-3-54 ஞாயிறன்று, திருவையாறு சுவாமி கோவில் சன்னதியில், வள்ளுவர் வாசக மன்றத்தின் சார்பில், மாலை 4 மணிக்கு தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுவார்.

இராயபுரம் தி.மு. கழகம் (2-வது வட்டம்)

"மேற்படி கழகத்தின் நிர்வாகக் குழுக் கூட்டம் 6-3-54 இரவு 7 மணிக்கு, சென்னை இராயபுரம், பி. வி. கோயில் தெரு, 79-ம் நெம்பர் கழக அலுவலகத்தில் நடைபெறும் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் தவறாது வரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்." என செயலாளர் எம். வரதன் அறிவிக்கிறார்.

37-வது வட்ட தி.மு.கழக உறுப்பினர்களுக்கு

"7-3-54 காலை 9 மணிக்கு, சென்னை, இராயப்பேட்டை தி மு. கழக 37—வது வட்ட கழக பணி மனையில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும் அவ்வமயம், வரவு-செலவு கணக்கு பார்த்தல், கழக ஆக்க வேலை குறித்தும், மற்றும் பல விஷயங்களைப் பற்றியும் பேச வேண்டியிருப்பதால், உறுப்பினர்கள் இதையே அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்," என, செயலாளர் கோ. இளவரசு அறிவிக்கிறார்.

தபால் தந்தி தொழிலாளர் சங்கம்

7—3—54 மாலை 3 மணிக்கு, திருச்சி தலைமை தபால நிலைய ராஜபகதூர் மண்டபத்தில், மேற்படி கிளைச் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா, சங்கத் தலைவர் தோழர் ஜி. ரெங்கசாமி தலைமையில் நடைபெறும். டாக்டர் ஜி சிற்றம்பலம், எம் எல். ஏ. விழாவைத் துவக்கி வைப்பார்.

ரிசர்வ் படைகள் திரட்டப்படுமாம்!

பாக் - சர்க்கார் முடிவு

லாகூர், மார்ச், 4— இராணுவத்திற்குப் புதிதாக ஆள் திரட்டுவதென்று பாகிஸ்தான் சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. 1950-ம் ஆண்டு ரிசர்வ் படை சட்டத்தின்படி இராணுவ அதிகாரிகளும், இதர படை வீரர்களும் திரட்டப்படுவர்.

புதுமை நிறைந்த பல முற்போக்குக் கருத்துக்களோடு மீண்டும் 1-4-1954 முதல் விரைந்து வருகிறாள்

பொன்னி

விவரங்கட்கு: பொன்னி லிமிடெட் 111, பவழக்கார தெரு, சென்னை-1.

சென்னை சர்க்கார்.....

—o—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியுள்ளதென்றும், கோயில் எதிரில் உள்ளதால் கட்டக் கூடாது என்பது நியாயமில்லை என்றும், கோவில் உள்ள தெரு வேறு என்றும், ஆகவே, இதை நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

காங்கிரஸ் கவுன்சிலர்கள் இத்தீர்மானத்தை வன்மையாக எதிர்த்தனர்.

பிறகு தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. காங்கிரஸ்காரர்கள் கவுன்சிலில் மெஜாரிட்டியாதலால் தீர்மானம் தோற்றது.

★

"ஆடிசன் பேட்டை 175 முதல், 189 வரை உள்ள கட்டிடங்களுக்கு பின்புறத்தில் மழைத் தண்ணீர், சாக்கடைத் தண்ணீர் போவதற்காக சாக்கடைக் கால் ஒன்று கட்டி, அதை, அம்பலவாண அருணாசல முதலியார் தெருவுக்குக் கொண்டு போய், சந்தைப் பொது சாக்கடையில் சேர்க்க வேண்டுமாய் இக்கவுன்சில் தீர்மானிக்கிறது,"

இத்தீர்மானத்தை தோழர் வி. மோகனம் பிரரேபித்து, சாக்கடையால் அவசியத்தைப் பற்றி எடுத்துரைத்தார்.

காங்கிரஸ்காரர்கள் தீர்மானத்தை வரவேற்கத் தக்கது தான் என்றும், மஞ்சள் நீர் கால்வாயின் தொடர்பை சரி செய்த பிறகு இதை செய்யலாமென்றும் கூறினர்.

தோழர் வி. மோகனம் பேசும் போது, மஞ்சள் நீர் கால்வாய் தொடர்பை சரி செய்த பிறகு தான் இது செய்யப்படுமென்றும், வேண்டுமானால் தீர்மானத்தை திருத்தத்துடன் நிறைவேற்றட்டும் என்று கூறினர்.

ஆனால், காங்கிரஸ்காரர்கள் திருத்தம் கொடுக்க சம்மதிக்கவில்லை

தலைவர் தீர்மானத்தை ஓட்டுக்கு விட்டார். மெஜாரிட்டி காங்கிரஸ் ஆனதால் தீர்மானத்தை தோற்கடித்தனர்.

குழந்தைகள் விடுதி திக்கிரையாயிற்று!

ஸ்ரீரங்கம், மார்ச். 4— ஜாகர்ன பெட்டியில் இந்திய மாதர் சங்கத்தால் நடத்தப்படுகின்ற கோகலே குழந்தைகள் விடுதி நேற்றிரவு தீக்கிரையாகிவிட்டது.

அனாதைக் குழந்தைகளுக்காக இவ்விடுதி நடத்தப்படுகிறது. இதில் 23 பேர் உள்ளனர். இவர்களில் 7 பேர் அகதிகள். இதில் 3 அகதிக் குழந்தைகளுக்கு சர்க்கார் உதவியளித்து வருகின்றனர். நஷ்டம் சுமார் ரூ. 10,000 இருக்குமென்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, ஸ்ரீலட்சுமி நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.